**O.S. No. 235 /2019**

**Date: 03.06.2026**

**பி.வா.சா.1 கருப்பசாமி**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

முந்தைய குறுக்கு விசாரணையின்போதுள னது தந்தையார் கிரையம் கொடுத்த 20.05.1971 ம் தேதிய கிரைய ஆவணத்தின் நகலினை தாக்கல் செய்யக் கோரி அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். எனது **தந்தை குருசாமி தேவர் ராமையாத் தேவருக்கு எழுதிக்கொடுத்த 20.05.1971 ம் தேதிய கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ-6** ஆகும். மேற்படி சொத்து எனது தகப்பனாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் அது என் தகப்பனாரின் பூர்வீக சொத்து ஆகும். அந்த சொத்தினை அடமானம் வைத்து மீண்டும் எனது தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி ஆவணத்தில் மேற்கு மால் குறிப்பிடும்போது கோபால் தேவர் வகையறா கிரைய நிலத்திற்கு கிழக்கு என்று தான் குறிப்பிட்டு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கோபால் தேவர் வகையறா கிரைய நிலத்திற்கு கிழக்கு என்று சொல்வது எந்த சொத்தை குறிக்கிறது என்றால் சர்வே எண். 761 ல் 1 ஏக்கர் 34 செண்டை குறிக்கிறது. மேற்படி பி.வா.சா.ஆ. 6 ஆவணத்தில் கிரைய நிலம் என்று குறிப்பிடுவது கோபால் தேவர் 1966 ல் பெற்ற கிரைய நிலத்தை தான் குறிக்கிறது என்றால் சரிதான், ஆனால் ஆவணத்தில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1966 கிரைய ஆவணத்தில் சர்வே எண்.760 ல் உள்ள நிலத்தையும் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 பாகப் பிரிவினை ஆவணத்தில் சர்வே எண்.760 ல் எனது தந்தைக்கு பாகம் ஒதுக்கியதாக சொல்லப்பட்டுள்ளது அது எந்த தபசிலின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. சர்வே எண்.760 ல் எனது தந்தைக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளதாக என்னுடைய நிரூபண உறுதிக்கூற்றிலும், எதிர் வழக்குரையிலும் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி சாத்துராப்ப தேவருக்கு எந்த எந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று கேட்டால் சர்வே எண் 759 ல் 3 ஏக்கர் 81

செண்டு, 758 ல் 19 செண்டு ஆக மொத்தம் 4 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது. கலிங்கப்பட்டி கிராமத்தில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் எனது தந்தைக்கு மட்டும் ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ல் ஆவணத்தில் சர்வே எண். 761 ல் கண்ட நிலம் என்னுடைய தந்தையார் 1966 ல் கிரையம் வாங்கியதாக கண்டுள்ளதால் மேற்படி சொத்துக்கள் என்னுடைய குடும்பத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் நாங்கள் சார்ந்த சமுதாயத்தில் குருசாமி, கருப்பசாமி, ஆறுமுகம், சாத்துாரப்பன் என்பதை அவரவர் கும்பிடும் தெய்வத்தினை குறிக்கக்கூடிய பொது பெயர் என்றால் சரிதான். குருசாமி என்ற பெயரில் எங்கள் ஊரில் எத்தனை பேர்கள் உள்ளார்கள் என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி பிவா.சா.ஆ.2 ஆவணம் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டதாக கூறுவது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. காலம் சென்ற குருசாமித் தேவர் மகன் குருசாமி தேவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது யார் என்றால் எனது தகப்பனார். என்னுடை தாத்தா குருசாமித் தேவர் எப்போது இறந்தார் என்றால் 1922 ல் இறந்துவிட்டார். மேற்படி எனது தாத்தா இறந்ததற்கான அவரது இறப்பு சான்றை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவரது இறப்பு சான்று என் கைவசம் உள்ளதா என்றால் அதை இனிமேல் தான் நகல் எடுக்க வேண்டும். தபசில் சொத்துக்களுக்கு எனது தாத்தா மற்றும் எனது அப்பா பெயரில் பட்டா இருப்பதை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி பட்டாவான வருவாய் துறை ஆவணம் எந்த வருடத்திற்குரியது என்றால் தெரியாது. மேற்படி நான் பார்த்தாக சொல்லப்படும பட்டா எங்கே உள்ளது என்றால் என் வசம் தான் உள்ளது. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்ன என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். பி.வா.சா.ஆ. 4 மற்றும் பிவா.சா.ஆ-5 ஆவணங்கள் எந்த ஆண்டு ஏற்பட்டது என்றால் 2009 ல் ஏற்படுத்தப்பட்டது. 2009 ல் சுப்புத்தாய் என்பவரிடம் இருந்து நான் கிரையம் பெற்ற ஆவணத்தின்

அடிப்படையில் மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது அதற்கு முன்பு பட்டா எண். 356 கோபால் தேவர் பெயரில் இருந்து வந்தது. பட்டா எண். 356 கோபால் தேவர் பெயரில் இருந்தால் தான் அவர் இறந்ததற்கு பின்னிட்டு அவரது மகளிடம் இருந்து கிரையம் பெற்று பட்டா மாறுதல் செய்து கொண்டேன் என்றால் சரிதான். 1986 மற்றும் 1988 ல் வாதிகள் கிரையம் பெற்றுவிட்டார்கள் என்றால் இந்த சொத்தைப் பொருத்து அந்த கிரையங்கள் கிடையாது. பி.வா.சா.ஆ.3 ஆவணம் எழுதுவதற்கு முன்பு நான் வில்லங்க சான்று எடுத்துப் பார்த்தேனா என்றால் எடுத்துப்பார்த்தேன் , எந்த ஆண்டில் இருந்து வில்லங்க சான்று எடுத்து பார்த்தேன் என்றால் 1929 லிருந்து எடுத்துப்பார்த்தேன். மேற்படி வில்லங்க சான்றுகள் எதுவும் தற்போது என் கைவசம் இல்லை. வில்லங்க சான்று எடுத்து பார்த்த போது 1966 மற்றும் 1986 ஆவணங்கள் துலங்கும் என்றால் அவ்வாறு எந்த ஆவணங்களும் துலங்கவில்லை. பி.வா.சா.ஆ. 3 ஆவணம் சர்வே எண். 761 ல் உள்ள சொத்து செல்லையா தேவர் கோபால் தேவரிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். மேற்படி செல்லையா தேவர் கிரையம் பெற்ற விவரம் பி.வா.சா.ஆ-3 ஆவணம் எழுதும்போதே எனக்கு தெரிந்திருந்தும் மேற்படி பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-3 ஆவணத்தில் கண்டுள்ள வாசகங்கள் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன், மேற்படி ஆவணத்தில் கண்ட வாசகங்கள் அனைத்தும் நான் படித்து பார்த்து சரிதான் என்று சொல்லி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-3 ஆவணத்தில் தபசில் சொத்து கோபால் தேவருக்கு பாத்தியப்பட்டது என்று ஒப்புக்கொண்டு அதற்கு மாறுபட்டு கட்சி செய்வது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. பிராதில் கண்ட தபசில் சொத்துக்கள் அனைத்தும் 25.03.1988, 21.04.1986 ஆகிய கிரைய ஆவணங்களின் படி இந்த வாதியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய காலங்கள் முதல் இந்த வாதிகள் தான் தபசில் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2010 ல் ஏற்பட்ட அடமான ஆவணத்தை ரத்து

செய்யக் கோரி பதிவுத் துறை அலுவலரிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி நான் கொடுத்த மனுவின் நகல் என்னிடம் உள்ளது. நான் கட்சி பொருப்பில் ஏதும் உள்ளேனா என்றால் திராவிட முன்னேற்ற கழகத்தில் வார்டு செயலாளராக உள்ளேன். நான் கொடுத்த மனுவை என்னுடைய பதவி பிரிண்டு செய்யப்பட்ட கார்டை வைத்து தான் அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி கட்சி ஆட்சியில் இருக்கும் போது என்னுடைய தகாத செல்வாக்கைப் பயன்படுத்தி மேற்படி பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 பட்டாக்களை ஏற்படுத்தியும், மற்றும் பதிவுத் துறை மூலமாகவும் இந்த வாதிகளுக்கு இடையூறு ஏற்படுத்தி வருகிறீர்கள் என்றால் சரியல்ல. நான் முறையற்று பெற்ற பட்டாக்களின் அடிப்படையில் வாதிகளின் அனுபவத்தை இடையூறு செய்வதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு வாதிகளின் செலவுத் தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.